தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்




Vol: 02 | Issue: 61 | 4 Pages | 1.10.2024 | Monday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825
மலர்: 02 | இதழ்: 61 | 4 பக்கங்கள் | 1.10.2024 செவ்வாய்க்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825



**மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்**
**பழித்த தொழித்து விடின்**

**விளக்கம்:**
உலகம் பழிக்கும் தீயொழுக்கத்தை விட்டு விட்டால் மொட்டை அடித்தலும் சடை வளர்த்தலுமாகியபுறக்கோலங்கள்வேண்டா.

## கொலம்பியா ஹெலிகாப்டர் விபத்தில் 8 ராணுவ வீரர்கள் உயிரிழப்பு



கொலம்பியா அக். 1

கொலம்பியாவில் ஹெலிகாப்டர் விபத்தில் 8 ராணுவ வீரர்கள் உயிரழந்துள்ளனர்.

வெனிசுலா நாட்டு எல்லையையொட்டிய பகுதியில், கொலம்பியா நாட்டை சேர்ந்த ராணுவ வீரர்கள் 8 பேர் ஹெலிகாப்டர் ஒன்றில் நிவாரண பணி ஒன்றை மேற்கொள்வதற்காக புறப்பட்டு சென்றனர்.

அப்போது அந்த ஹெலிகாப்டர் குமரிபோ என்ற நகராட்சிக்கு உட்பட்ட கிராம பகுதியில் திடீரென விபத்தில் சிக்கியது. இதில், ஹெலிகாப்டரில் பயணித்த ஒருவரும் தப்பவில்லை. இந்த விபத்தில், ராணுவ வீரர்கள் 8 பேரும் உயிரிழந்து உள்ளனர்.

இதனை அந்நாட்டின் ஜனாதிபதி கஸ்டாவோ பெட்ரோ அவருடைய எக்ஸ் சமூக ஊடக பதிவில் பகிர்ந்து உள்ளார். எனினும், விபத்து எப்போது நடந்தது போன்ற விவரங்களை வெளியிடவில்லை.

## நேபாள நிலச்சரிவு: பலி எண்ணிக்கை 148 ஆக அதிகரிப்பு



காத்மண்டு,அக். 1

நேபாளத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. பல நகரங்கள் வெள்ளக் காடாக காட்சியளிக்கின்றன. தலைநகர் காத்மண்டுவில் 200க்கு மேற்பட்ட வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின. அங்கு பயங்கர நிலச்சரிவு ஏற்பட்டது. இதில் பலர் சிக்கிக் கொண்டனர்.

நேபாளம் முழுவதும் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 100ஐ கடந்தது.

அதிகபட்சமாக காத்மண்டு பள்ளத்தாக்கில் 48 பேர் உயிரிழந்தனர். மேலும் 64 பேரை காணவில்லை. தொடர் மழையால் காத்மண்டுவின் முக்கிய நதியான பாக்மதியில் அபாய அளவை தாண்டி தண்ணீர் பாய்ந்து செல்கிறது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் நடந்து வருகிறது.

பல நெடுஞ்சாலைகள் மற்றும் சாலைகள் சீர்குலைந்துள்ளன. நூற்றுக்கணக்கான வீடுகள் மற்றும் பாலங்கள் அடித்துச் செல்லப்பட்டன, இதனால் நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளன.

நேபாளம் பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த 3,000 வீரர்கள் மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். அவர்களுடன் உள்ளூர் மக்களும் இணைந்து மீட்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், நேபாளத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 148 ஆக உயர்ந்துள்ளது என மீட்புக் குழுவினர் தெரிவித்தனர்.

## இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் மற்றொரு ஹிஸ்புல்லா அமைப்பின் உயர்மட்ட தலைவர் உயிரிழப்பு



ஜெருசலேம், அக். 1

லெபனானில் இயங்கி வரும் ஹிஸ்புல்லா அமைப்பினரைக் குறிவைத்து கடந்த வாரம் முதல் இஸ்ரேல் ராணுவம் அதிரடி தாக்குதல் நடத்தி வருகிறது.

ஹிஸ்புல்லா அமைப்பினரின் பேஜர்கள், வாக்கி டாக்கிகள் உள்ளிட்ட தொலைத்தொடர்பு சாதனங்கள் வெடித்துச் சிதறியதில் பொதுமக்கள் உள்பட சுமார் 3,000 பேர் படுகாயம் அடைந்தனர். இரு குழந்தைகள் உள்பட 37 பேர் உயிரிழந்தனர்.

தொடர்ந்து, லெபனானில் ஹிஸ்புல்லா நிலைகளைக் குறிவைத்து இஸ்ரேல் ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது. இதில் ஹிஸ்புல்லா கமாண்டர்கள் சிலர் கொல்லப்பட்டனர். இந்த தாக்குதலில் ஒரே வாரத்தில் லெபனானில் 700க்கும் மேற்பட்டோர் உயிழந்தனர். போர் பதற்றம் காரணமாக மக்கள் தங்களின் வீடுகளை விட்டு இடம்பெயர்ந்தனர்.

இதற்கிடையே, கடந்த வெள்ளிக்கிழமை லெபனான் தலைநகர் பெய்ரூட்டின் தெற்கு பகுதியில் உள்ள தாஹியே பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பின் தலைவர் ஹசன் நஸ்ரல்லா உயிரிழந்தார் என இஸ்ரேல் ராணுவம் அறிவித்தது.

இந்நிலையில், லெபனான் மீது நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அமைப்பைச் சேர்ந்த மற்றொரு உயர்மட்ட தலைவரான நபில் கவுக் கொல்லப்பட்டுள்ளார் என இஸ்ரேல் ராணுவம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேல் நடத்தி வரும் தொடர் தாக்குதலில் முக்கிய தலைவர்களை இழந்து வருவது ஹிஸ்புல்லா அமைப்பினருக்கு பெரும் பின்னடைவாகக் கருதப்படுகிறது.

# இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவிக்க வலுவான தூதரக நடவடிக்கை வேண்டும்

## ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சருக்கு முதல்வர் கடிதம்

சென்னை, அக் 1

இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாடு மீனவர்கள் சிறைபிடிக்கப்படுவதை தடுக்கவும், மீனவர்களையும், மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்க வலுவான தூதரக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என ஒன்றிய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

ராமேஸ்வரம் மீன்பிடித்தளத்திலிருந்து இரண்டு படகுகளில் கடந்த 28ம் தேதியன்று தமிழ்நாட்டைச் சேர்ந்த 17 மீனவர்கள் மீன்பிடிக்கச் சென்றிருந்த நிலையில், நேற்று நெடுந்தீவு அருகே இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் சிறைபிடிக்கப்படுவதும், அவர்களது படகுகள் பறிமுதல் செய்யப்படுவதும் கடலோர பகுதிகளில் வாழும் மீனவ சமுதாயத்தினரிடையே



மிகுந்த துயரத்தையும், அவர்களது வாழ்வில் நிச்சயமற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது.

இந்த சிக்கலான பிரச்னையை தூதரக ரீதியாக தீர்த்திட உறுதியான மற்றும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று தான் ஏற்கனவே வலியுறுத்தியுள்ளேன், நிலைமையின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, கடந்த 27ம் தேதி பிரதமரிடம் சமர்ப்பித்த கோரிக்கைகளில் ஒன்றாக இந்தக் கோரிக்கையையும் வலியுறுத்தியுள்ளேன்.

எனவே, நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதை தடுக்கவும், சிறைபிடிக்கப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடி படகுகளையும் இலங்கை அரசிடமிருந்து உடனடியாக விடுவிக்கவும், வலுவான மற்றும் பயனுள்ள தூதரக நடவடிக்கைகளைமேற்கொள்ளவேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

# அக்.3 முதல் 12ம் தேதி வரை மயிலாப்பூரில் மாபெரும் கொலுவுடன் நவராத்திரி பெருவிழா: அமைச்சர் தகவல்

சென்னை, அக். 1

அக்டோபர் 3 முதல் 12ம் தேதி வரை மயிலாப்பூரில் மாபெரும் கொலுவுடன் நவராத்திரி பெருவிழா நடைபெறும் என அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார். ஆவர் கூறியதாவது: இந்து சமய அறநிலையத்துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள கோயில்கள் சார்பில் கமல முனி சித்தர், பாம்பாட்டி சித்தர், சுந்தரானந்த சித்தர் ஆகிய சித்தர் பெருமக்களுக்கும், அருட்பிரகாச வள்ளலார், தெய்வப் புலவர் சேக்கிழார், சமய குரவர்களில் ஒருவரான திருநாவுக்கரசர், நாலாயிர திவ்ய பிரபந்த தமிழ் மறைநூலினைத் தொகுத்தவரான மத்நாதமுனிகள் மற்றும் அவரது பெயரன் ஆளவந்தார் ஆச்சாரியார் போன்ற அருளாளர்களுக்கும் விழா எடுத்து சிறப்பு செய்யப்பட்டு வருகிறது. மேலும், கடந்தாண்டு 7 கோயில்கள் சார்பில் மகா சிவராத்திரி பெருவிழாவும், சென்னை, மயிலாப்பூரில் நவராத்திரி பெருவிழாவும் பக்தர்கள் பங்கேற்புடன் விமரிசையாக நடத்தப்பட்டது. உலகில் தீமைகளை அழித்து தர்மத்தை நிலை நாட்டும் சக்தி வழிபாட்டின் தத்துவங்களை உணர்த்துகின்ற தொடர் நிகழ்வாக கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா கோயில்கள் சார்பில் சென்னை, மயிலாப்பூர் கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் மாபெரும் கொலுவுடன் 3ம் தேதி முதல் 12ம் தேதி வரை 10 நாட்கள் கொண்டாடப்பட உள்ளது. ஒவ்வொரு நாளும் மாலையில் சிறப்பு வழிபாடும், இசை மற்றும் கலைநிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

நவராத்திரி விழாவின் முதல் நாள் நிகழ்ச்சியாக அன்று சகலகலாவல்லி மாலை வழிபாடு மற்றும் திரைப்பட பின்னணி பாடகி கலைமாமணி மாலதி மற்றும் முகேஷ் குழுவினரின் பக்தி இசைநிகழ்ச்சியுடன் தொடங்கி, தினந்தோறும் ஒரு வழிபாட்டுடன் கலைமாமணி வீரமணி ராஜு மற்றும் அபிஷேக் ராஜு குழுவினர், பின்னணி வேல்முருகன், இறை அருட்செல்வி தியா, செல்வன் சூரிய நாராயணன் ஆகியோரின் பக்தி இசையும், மீனாட்சி இளையராஜா குழுவினரின் கிராமிய பக்தி இசை, கலைமாமணி தேச மங்கையர்க்கரசி ஆகியோரின் ஆன்மிக சொற்பொழிவு ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. கோயில்கள் சார்பில் கொண்டாடப்படும் நவராத்திரி பெருவிழா நிகழ்ச்சிகளில் தவத்திரு ஆதீன பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், சமய சான்றோர்கள் மற்றும் இறையன்பர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

# தமிழக அரசின் தலைமை கொறடாவாக முன்னாள் அமைச்சர் ராமசந்திரன் நியமனம்



சென்னை, அக். 1

தமிழ்நாடு அரசின் தலைமை கொறடாவாக முன்னாள் அமைச்சர் ராமசந்திரன் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழக அமைச்சரவை மாற்றியமைக்கப்பட்டது. அதில் அமைச்சர்களாக இருந்த மனோ தங்கராஜ், செஞ்சி மஸ்தான், கே.ராமச்சந்திரன் ஆகியோர் நீக்கப்பட்டனர். அதே வேளையில் ஆவடி நாசர், செந்தில் பாலாஜி, ராஜேந்திரன், கோவி.செழியன் ஆகியோர் புதிதாக அமைச்சரவையில் சேர்க்கப்பட்டனர். அவர்களுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று பதவிப் பிரமாணம் செய்து வைத்தார். தொடர்ந்து புதிய அமைச்சர்களுக்கான இலாக்காக்கள் ஒதுக்கப்பட்டது. அதே நேரத்தில் தமிழ்நாடு அரசின் தலைமை கொறடாவாக இருந்த கோவி.செழியன் அமைச்சரானதால், அவர் வகித்து வந்த அரசு தலைமை கொறடா பதவி காலியானது. இதைத் தொடர்ந்து அமைச்சரவையில் இருந்து விடுவிக்கப்பட்ட கா.ராமசந்திரனுக்கு அந்த தலைமை கொறடா பதவி வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை செயலாளர் கி.சீனிவாசன் நேற்று வெளியிட்ட அறிவிப்பில், குன்னூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கா.ராமசந்திரன், அரசுத் தலைமைக் கொறடாவாக நியமிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# புகையிலை பொருட்கள் விற்ற கடைகளுக்கு சீல்

பெரியகுளம், அக். 1

பெரியகுளம் பகுதியில் புகையிலைப்பொருட்கள் விற்ற கடைகளுக்கு அதிகாரிகள் சீல் வைத்தனர். தேனி மாவட்டம், பெரியகுளம் நகராட்சி மற்றும் தேவதானப்பட்டி பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில் அரசால் தடை செய்யப்பட்ட புகையிலை பொருட்கள் விற்பனை நடைபெற்று வருவதாக உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகளுக்கு வந்த தகவலின் அடிப்படையில் தீவிர கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர். இதனை அடுத்து தேனி மாவட்ட உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் உத்தரவின் அடிப்படையில் பெரியகுளம் மற்றும் தேவதானப்பட்டி பகுதியில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரி சத்தீஸ்வரன் தலைமையிலான குழுவினர் பள்ளிகளின் அருகே செயல்பட்டு வரும் பெட்டிக் கடைகளை கண்காணித்த பொழுது பெரியகுளம் நகராட்சிக்கு எதிராக உள்ள பெட்டிகடைகளில் புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்த பொழுது கையும் களவுமாக பிடிபட்டனர்.

இதனைத் தொடர்ந்து பெட்டிக்கடைகளில் வைத்திருந்த புகையிலை பொருட்கள் பறிமுதல் செய்து கடைக்கு சீல் வைத்தனர். இதேபோல் தேவதானப்பட்டி பகுதியில் உள்ள கடை ஒன்றில் தடை செய்யப்பட்ட புகையிலைப் பொருட்கள் விற்பனை செய்யப்பட்டதும் உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து அரசால் தடை பெட்டிக்கடைகளை 15 நாட்கள் திறக்கக் கூடாது என தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு கடையை பூட்டி சீல் வைக்கப்பட்டு கடை உரிமையாளர்களுக்கு தலா ரூ.25000 அபராதம் விதித்து உணவு பாதுகாப்புத் துறையினர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.



அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் நடத்தும் மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி அனந்தபுரம் S.P.பாரா மெடிக்கல் சயின்ஸில் நடைபெற்றது. அனந்தபுரம் ரோட்டரி சமுதாய குழுமம் முன்னாள் தலைவர் விக்கிரவாண்டி தாலுக்கா நுகர்வோர் கண்காணிப்பு குழு உறுப்பினர் ஜேசு ஜூலியஸ் ராஜா தலைமை தாங்கினார். தாளாளர் பச்சையப்பன் முன்னிலை வகித்தார். மரம் வளர்ப்பதின் அவசியம் குறித்து மாணவிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்ச்சிக்கு ஆசிரியை ரேவதி மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்



குன்னூரில் பெய்த கனமழையின் காரணமாக கிருஷ்ணாபுரம் பகுதியில் வசித்துவரும் ரவீந்திரநாத் என்பவரின் மனைவி ஜெயலட்சுமி (35) நிலச்சரிவில் சிக்கி உயிரிழந்தார்.

# கரூர் மாவட்டத்தில் ஆயுத பூஜையை முன்னிட்டு பொரி தயாரிக்கும் பணி தீவிரம்

வேலாயுதம்பாளையம், அக். 1

அக்டோபர் மாதத்தில் சரஸ்வதி பூஜை, ஆயுத பூஜை தமிழகத்தில் விமரிசையாகக் கொண்டாடப்படும் பண்டிகை. அந்த நாளில், படித்த புத்தகங்கள், கணக்கு வழக்கு எழுதிய டைரிகள், வாகனங்கள், இயந்திரம், கருவி, ஆயுதங்களை வைத்து பூஜை செய்கின்றனர். அந்த பூஜையில் பொரி, முக்கிய பூஜை பொருளாக பயன்படுத்தப்படுகிறது.



தமிழகத்தில் நாமக்கல், சேலம், தருமபுரி, கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் பழமையான முறையில் பொரி தயாரிக்கப்படுகிறது. கர்நாடகா, மேற்கு வங்கத்தில் இருந்து நேரடியாக, 64 என்ற நெல் ரகங்களை வாங்கி, அதில் இருந்து அரிசி எடுத்து, அதில் சிறிதளவு உப்பு தண்ணீர் சேர்த்து காய வைத்து, சர்க்கரை, சோடா சேர்த்து, பொரி தயாரிப்பதை 'ஒருப்பு பொரி' என்கின்றனர்.

அதேபோல் சிகப்பு அரிசியை வாங்கி, அதில் பொரி தயாரிப்பதை 'சிகப்பரிசி பொரி' என்கின்றனர். தவுட்டுப்பாளையம் அருகே சுல்தான்பேட்டையில், விறகுகளில் நெருப்பு மூட்டி செய்யப்படும் பொரி சுவையாக இருக்கும். இதனால், மக்கள் அடுப்பு பொரிகளையே விரும்பி வாங்குகின்றனர்.

இதுகுறித்து பொரி தயாரிக்கும் ராமசாமி என்பவர் கூறியதாவது:

நாங்கள் தயாரிக்கும் பொரி சுவையாக இருக்கும். இதை சேலம், நாமக்கல், கரூர்மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். மூன்று தலைமுறையாக பொரி தயாரித்து வருகிறோம். கையால் தயாரிக்கப்படும் பொரி என்பதால், சுவை மிகுந்தது. கடந்த ஆண்டு 50 பக்கா கொண்ட ஒரு மூட்டை பொரி ரூ.500 வரை விற்பனை செய்யப்பட்டது.

நடப்பாண்டு மூட்டைக்கு ரூ.50 முதல் ரூ.100 வரை விலை உயர்ந்துள்ளது. கடந்த ஆண்டை விட, இந்த ஆண்டு நல்ல விலை கிடைத்துள்ளதால், பொரி தயாரிப்பவர்களும், வியாபாரிகளும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பண்டிகை நீங்கலாக, பிற காலத்தில், பானிபூரி, மிக்சர் உட்பட பல உணவுப் பொருள்களுடன் கலக்கவும், கோவில், வீடு, கடைகளில் தினசரி பூஜையில் வைக்கவும், ரெகுலராக பொரியை வாங்கிச் செல்கின்றனர். கையால் தயாரிக்கப்படும் பொரி வகை, உடல் நலத்திற்கு ஏற்றது.

இவ்வாறு அவர் கூறினார்.

# தேனி மாவட்டத்தில் கன மழை: மஞ்சளாற்று கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை

தேவதானப்பட்டி, அக். 1

தேனி மாவட்டம் பெரியகுளம் அருகே மஞ்சளாறு அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்ததால் அணைக்கு திடீரென நீர்வரத்து 184 கனஅடியாக உயர்ந்தது.



ஏற்கனவே மஞ்சளாறு அணை முழு கொள்ளளவான 57 அடியில் 55 அடியை எட்டி 30 நாட்களுக்கும் மேலாக அதே நிலையில் நீடிக்கிறது.

அணைக்கு நீர் வரத்து இல்லாமல் இருந்த நிலையில் நேற்று பெய்த கன மழையால் அணைக்கு நீர் வரத்து 184 கனஅடியாக அதிகரித்தது. 184 கன அடி நீரை அப்படியே மஞ்சளாறு ஆற்றில் திறந்து விடப்பட்டது.

மேலும் அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் இன்றும் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதால் அணைக்கு மேலும் நீர்வரத்து அதிகரிக்கும் என பொதுப்பணித்துறையினர் தெரிவித்துள்ளனர். மேலும் மஞ்சளாற்று கரையோரம் உள்ள மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

இதேபோல் பெரியகுளம் அதன் சுற்றுவட்டார பகுதியில் கடந்த 20 நாட்களுக்கு மேலாக காலை முதல் மாலை வரை வெயில் சுட்டெரித்து வந்தது.

இதனிடையே பெரியகுளத்தை சுற்றியுள்ள மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதிகளான சோத்துப்பாறை வனப்பகுதி, கும்பக்கரை வனப்பகுதி, கல்லாறு வனப்பகுதி உள்ளிட்ட பகுதியில் நேற்று மாலை முதல் கனமழை பெய்தது.

எ.புதுப்பட்டி, வடுகபட்டி, சில்வார்பட்டி, மேல்மங்கலம், லட்சுமிபுரம், கைலாசபட்டி உள்ளிட்ட பகுதிகளில் இடி மின்னலுடன் கூடிய கன மழை இரவு முழுவதும் பெய்தது.

மேலும் சின்னமனூர், பாளையம், கோம்பை, கூடலூர், கம்பம் உள்ளிட்ட பகுதிகளிலும் மழை பெய்ததால் வெப்பம் தணிந்தது. இதனால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

முல்லைப்பெரியாறு அணை 126.25 அடியாக உள்ளது. அணைக்கு 570 கன அடி நீர் வருகிறது. அணையில் இருந்து 1511 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

3888 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது. வைகை அணையின் நீர்மட்டம் 57.25 அடியாக உள்ளது. 1441 கன அடி நீர் வருகிறது.

மதுரை மாநகர குடிநீர் மற்றும் பாசனத்துக்காக 1199 கனஅடி நீர் திறக்கப்படுகிறது. 3097 மி.கன அடி நீர் இருப்பு உள்ளது.

சோத்துப்பாறை அணையின் நீர்மட்டம் 114.30 அடியாக உள்ளது. வரத்து இல்லாத நிலையில் 3 கன அடி நீர் திறக்கப்படுகிறது.

பெரியாறு 17.4, தேக்கடி 12.6, கூடலூர் 8.4, சண்முகாநதி அணை 8.6, உத்தமபாளையம் 5.6, வீரபாண்டி 2, வைகை அணை 38, மஞ்சளாறு 61, சோத்துப்பாறை 12, கொடைக்கானல் 17 மி.மீ மழை அளவு பதிவானது.

# அனுமதி பெறாததால் தமிழக வெற்றிக்கழகம் கொடி ஏற்றுதல் நிகழ்ச்சிக்கு தடை விதித்த போலீசார்

ஈரோடு, அக். 1

நடிகர் விஜய் தமிழக வெற்றிக்கழகம் கட்சியை தொடங்கியுள்ளார். கட்சி கொடியை அறிமுகப்படுத்தி வரும் அக்டோபர் மாதம் 27ம் தேதி விக்கிரவாண்டியில் முதல் மாநில மாநாடு நடைபெற உள்ளது. இதனை அடுத்து தமிழகம் முழுவதும் தமிழக வெற்றிக்கழகத்தினர் கட்சிக் கொடியை ஏற்றி நலத்திட்ட உதவிகள் வழங்கி வருகின்றனர்.



இதன்படி ஈரோடு மாநகராட்சி பகுதிக்குட்பட்ட ராஜாஜிபுரத்தில் கடந்த 3 மாதங்களுக்கு முன்பே தமிழக வெற்றிக்கழகம் சார்பில் கட்சி கம்பம் நடப்பட்டது. கட்சிக்கொடி மட்டும் ஏற்றப்படாமல் இருந்தது. கம்பம் நடுவதற்காக மாநகராட்சியில் கட்சி நிர்வாகிகள் அனுமதி கடிதம் அனுப்பி இருந்தனர்.

ஆனால் பதில் வரவில்லை. பின்னர் மீண்டும் தமிழக வெற்றிக்கழகத்தினர் நினைவூட்டம் கடிதம் அனுப்பி இருந்தனர். அதற்கும் பதில் வரவில்லை. இந்நிலையில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை தமிழக வெற்றிக்கழகத்தினர் கம்பத்தில் கட்சிக்கொடி ஏற்றி பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்திருந்தனர்.

இதுகுறித்து கருங்கல்பாளையம் போலீசாருக்கு தகவல் கிடைத்து. நேற்று மாலை 6.30 மணி அளவில் 10க்கும் மேற்பட்ட போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து கட்சிக்கொடியேற்றுதல் நிகழ்ச்சிக்கு உரிய அனுமதி பெறவில்லை என்பதால் நாளை நிகழ்ச்சி நடத்தக்கூடாது என்று கூறினர். இதனால் அந்த பகுதியில் பரபரப்பு நிலவியது.

தமிழக வெற்றிக்கழகத்தினர் மற்றும் பொதுமக்கள் அங்கு கூடினர். அவர்கள் போலீசாரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இதனை அடுத்து டவுன் டி.எஸ்.பி. முத்துக்குமரன் தலைமையில் இன்ஸ்பெக்டர் விஜயன் உள்பட 50க்கும் மேற்பட்ட போலீசார் சம்பவ இடத்துக்கு வந்தனர்.

அப்போது கட்சி நிர்வாகிகளுடன் டவுன் டி.எஸ்.பி முத்துக்குமரன் பேச்சுவார்த்தை நடத்தினார். நாளை நடைபெறும் நிகழ்ச்சிக்கு உரிய அனுமதி பெறவில்லை என்பதால் நிகழ்ச்சி நடத்தக்கூடாது, மீறி நடத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அதற்கு கட்சி நிர்வாகிகள் நாங்கள் அனுமதி கடிதம் கொடுத்தும் இதுவரை பதில் வரவில்லை. அனுமதி கடிதம் ஆவணங்களை உங்களிடம் காட்டுகிறோம் என்று கூறி செல்போனில் ஆவணங்களை காட்டினர்.

ஆனால் இது செல்லுபடியாகது. முறைப்படி அனுமதி கடிதம் பெற்றால் தான் நிகழ்ச்சி நடத்த முடியும். மீறி நடத்தினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். அப்போது டவுன் டி.எஸ்.பி.யிடம் கட்சி நிர்வாகிகள், அப்பகுதி பொதுமக்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். இரவு 9.30 மணி வரை இந்த பிரச்சனை நீடித்தது.

பின்னர் ஒரு வழியாக சமாதானமாகி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் உரிய அனுமதி பெறாமல் எந்தவித நிகழ்ச்சியும் நடத்தப்படமாட்டது என்றும் மீறி நடக்கும் பட்சத்தில் மேற்கொள்ளப்படும் சட்ட நடவடிக்கைக்கு உட்படுவதாக கட்சியினர் கடிதம் மூலம் உத்தரவாதம் அளித்தனர்.

இதனை ஏற்று போலீசார் கலைந்து சென்றனர். எனினும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக இரவு முழுவதும் போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது. இதனால் அப்பகுதியில் பரபரப்பான சூழ்நிலை நிலவியது.

# மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

சேலம், அக். 1

மேட்டூர் அணையின் நீர்மட்டம் இன்று காலை நிலவரப்படி 96.19 அடியாக இருந்தது. அணைக்கு நேற்று வினாடிக்கு 2 ஆயிரத்து 556 கனஅடி தண்ணீர் வந்து கொண்டு இருந்த நிலையில் அது இன்று 2 ஆயிரத்து 718 கனஅடியாக அதிகரித்து காணப்பட்டது.

அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு 15 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு 700 கனஅடியும் தண்ணீர் வெளியேற்றப்பட்டு வருகிறது.

அணையில் தற்போது 60.01 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

# துணை முதலமைச்சர் பதவி அல்ல... பொறுப்பு: உதயநிதி வலைதளத்தில் பதிவு

சென்னை, அக். 1

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் தமிழக துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டுள்ளார். இன்று மாலையில் பதவியேற்பு விழா நடைபெற உள்ள நிலையில் உதயநிதி ஸ்டாலின் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

நம் பெருமைமிகு தமிழ்நாட்டின் துணை முதலமைச்சராக பணியாற்றுவதற்கான வாய்ப்பை நமக்கு அளித்த கழகத்தலைவர் முதலமைச்சர், பொதுச்செயலாளர், பொருளாளர் மற்றும் அமைச்சர்களுடன் நேரில் சந்தித்து வாழ்த்து பெற்றோம்.

'துணை முதலமைச்சர்' என்பது பதவி அல்ல, பொறுப்பு என்பதை உணர்ந்து, தமிழ்நாட்டு மக்களின் ஏற்றத்துக்காக, தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் வகுத்து தந்த பாதையில், முதலமைச்சரின் வழிகாட்டலில், சக அமைச்சர்களோடு இணைந்து பணியாற்றுவோம்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை நேரில் சந்தித்து உதயநிதி ஸ்டாலின் பொன்னாடை அணிவித்து வாழ்த்து பெற்றார். அப்போது அமைச்சர்கள் துரை முருகன், கே.என்.நேரு, எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், சேகர் பாபு, அன்பில் மகேஷ் பொய்யாமொழி, டி.ஆர்.பாலு எம்.பி. ஆகியோர் உடன் இருந்தனர்.

இவர்களும் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்து தெரிவித்தனர். உதயநிதி ஸ்டாலின் துணை முதலமைச்சராக அறிவிக்கப்பட்டதையடுத்து தி.மு.க.வினர் பட்டாசு வெடித்தும் இனிப்புகள் வழங்கியும் கொண்டாடி மகிழ்ந்தனர். சென்னையில், பல்வேறு இடங்களில் நேற்று இரவு தி.மு.க. முன்னணி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கினார்கள்.

# மயிலம் அருகே கார் மோதி விபத்து: 3 பேர் பலி

மயிலம், அக். 1

விழுப்புரம் மாவட்டம் மயிலம் அருகே உள்ள பேரணி கிராமத்தை சேர்ந்தவர் அய்யப்பன் (32), இவரது நண்பர் பூபாலன் (49). இவர்கள் இருவரும் திருப்பதி கோவிலுக்கு சென்று விட்டு திண்டிவனத்தில் நிறுத்தி வைத்திருந்த தங்களது மோட்டார் சைக்கிளில் பேரணி கிராமத்திற்கு திண்டிவனம் விழுப்புரம் தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்தனர்.

நள்ளிரவு 12 மணியளவில் விலங்கம்பாடி பெட்ரோல் பங்க் அருகே வரும் போது திண்டிவனத்தில் இருந்து விழுப்புரம் மார்க்கமாக அதிவேகமாக வந்த காரானது ஏற்கனவே நடந்து சென்ற ஒருவர் மீது மோதி அவர் தூக்கி வீசப்பட்ட நிலையில் அந்த கார் அய்யப்பன், பூபாலன் ஆகியோர் சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 3பேரும் உடல் நசுங்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். விபத்து குறித்து மயிலம் போலீசாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு போலீசார் விரைந்து வந்து 3 பேர் உடலையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இது குறித்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்து வருகின்றனர். இந்த விபத்தால் சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிப்பு ஏற்பட்டது. விபத்தில் இறந்த ஒருவர் யார்? எந்த ஊர் என்பது தெரியவில்லை. அவர் குறித்து போலீசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

கார் மோதி 3 பேர் பலியான சம்பவம் மயிலம் பகுதியில் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# கயத்தாறு அருகே சூறாவளிக்காற்றுடன் பெய்த மழையால் வீடுகள் இடிந்து சேதம்

கயத்தாறு, அக். 1

கயத்தாறு அருகே தெற்கு இலந்தைகுளம் கிராமத்தில் நேற்று மாலை பெய்த மழை மற்றும் சூறாவளி காற்றில் அங்குள்ள ஓட்டு வீடுகளில் ஓடுகள் தூக்கி வீசப்பட்டது. சுப்பிரமணியன், ஜோதி, சுடலை, பெருமாள், மகரஜோதி ஆகியோரது வீடுகளின் சுவர் மற்றும் ஓடுகள் சேதம் அடைந்துள்ளன.



மேலும் மண்சுவர்களால் ஆன வீடுகள் மழையினால் இடிந்து விழுந்தது. இதில் அதிர்ஷ்டவசமாக அங்கிருந்தவர்கள் காயமின்றி தப்பினர். பொருட்கள் மட்டும் சேதமடைந்தது. ஓடுகள் உடைந்த வீட்டினை தெற்கு இலந்தைகுளம் பஞ்சாயத்து தலைவர் செல்விரவிக்குமார், முன்னாள் பஞ்சாயத்து தலைவர் செல்லையா, கிராம நிர்வாக அலுவலர் சுப்பையாபாண்டியன் ஆகியோர் சென்று பார்வையிட்டனர்.

# காலாண்டு விடுமுறை எதிரொலி பழனிக்கு படையெடுத்த பக்தர்கள்

பழனி, அக். 1

தமிழ் கடவுள் முருகனின் 3ம் படை வீடான பழனிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து பக்தர்கள் வருகின்றனர். தைப்பூசம், வைகாசி விசாகம், சூரசம்ஹாரம் உள்பட முக்கிய திருவிழாவின் போது ஏராளமான பக்தர்கள் பழனியில் குவிகின்றனர். மேலும் விடுமுறை நாட்களில் அதிக அளவில் பக்தர்கள் வருவதால் வருடம் முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

நேற்று முதல் 10 நாட்களுக்கு காலாண்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஏராளமானோர் குடும்பத்துடன் பழனிக்கு படையெடுத்தனர்.

இதனால் பஸ் நிலையம், அடிவாரம், கிரிவீதி உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.


மேலும் படிப்பாதை, யானைப்பாதை, வின்ச்நிலையம், ரோப்கார் நிலையம் உள்ளிட்ட இடங்களிலும் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. மலைக்கோவிலில் ஏராளமானோர் திரண்டனர். பொது தரிசனம், சிறப்பு தரிசனங்களிலும் நீண்ட வரிசை காணப்பட்டது. நீண்ட நேரத்திற்கு மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

அதிக அளவில் பக்தர்கள் வாகனங்கள் வந்திருந்ததால் பழனி நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# நாகை மாவட்டம், தோப்புத்துறை அருகே நடுக்கடலில் இருதரப்பு மீனவர்களிடையே மோதல்

நாகை, அக். 1

நாகப்பட்டினம் மாவட்டம், தோப்புத்துறை அருகே நடுக்கடலில் இருதரப்பு மீனவர்களிடையே மோதல் ஏற்பட்டதால் பரபரப்பு ஏற்பட்டது. ஃபைபர் படகு மீனவர்கள் மீது இரும்பு குண்டுகளை வீசி, விசைப்படகு மீனவர்கள் தாக்குதலில் ஈடுபட்டனர். இதில் காயமடைந்த செருதூரை சேர்ந்த ஃபைபர் படகு மீனவர்கள் நாகை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். நாகையில் பைபர், விசைப்படகுகள் மூலம் மீனவர்கள் மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். நேற்று சிறுதூர் கிராமத்தைச்சேர்ந்த மீனவர்கள் பைபர் படகுகளில் மீன்பிடிக்கச் சென்றிருந்தனர். அப்போது விசைப்படகு மீனவர்களுக்கும் பைபர் படகு மீனவர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதல் தொடர்பான காட்சிகள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது. அந்த காட்சியில் சிறுதூர் கிராமத்தைச் சேர்ந்த 4 பைபர்படகு மீனவர்கள், இரண்டு விசை படகின் மீது மோதுவது போன்று பத்திவாகியிருந்தது.



நடுக்கடலில் இருதரப்பு மீனவர்களுக்கிடையே மீன் பிடிப்பதில் தகராறு ஏற்பட்டதாகவும், தகராறில் படகுகளை மோத செய்ததாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. நங்கூரமிட்டு இருந்த ஃபைபர் படகின் கயிற்றை, விசைப்படகு மாட்டி இழுத்துச் சென்றதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது. இந்த சூழ்நிலையில் 4 பைபர் படகுகளில் 2 பைபர் படகுகள் கரை வந்து சேர்ந்துள்ளதாகவும் மற்ற 2 பைபர் படகுகள் கரைக்கு வந்து கொண்டிருப்பதாகவும் தகவல் வெளியாகியுள்ளது. இதனால் சிறுதூர் கிராமத்தைச் சேர்ந்தமீனவர்கள்மோதல் குறித்து ஆலோசனைக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளனர். மேலும் இது தொடர்பாக கடலோர பாதுகாப்பு குழும போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# தேர்வு விடுமுறையால் ஏற்காட்டில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

ஏற்காடு, அக். 1

ஏற்காட்டில் நிலவி வரும் குளுகுளு சீசனை அனுபவிக்க தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளா, கர்நாடகா மாநிலங்களில் இருந்தும் சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வந்து செல்கிறார்கள்.

குறிப்பாக அரசு விடுமுறை நாட்கள், வார இறுதி நாட்கள், தொடர் விடுமுறை நாட்களில் சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து காணப்படும்.

இந்த நிலையில் கடந்த ஒரு வாரமாக தமிழகத்தில் பள்ளிகளில் காலாண்டு தேர்வுகள் நடந்ததால் சுற்றுலாப் பயணிகள் இன்றி ஏற்காடு வெறிச்சோடியது. இதற்கிடையே தற்போது பள்ளிகளில் காலாண்டு தேர்வு முடிந்து தொடர் விடுமுறை அளிக்கப்பட்டு இருப்பதாலும், இன்று ஞாயிற்றுக்கிழமை விடுமுறை தினம் என்பதாலும் காலையிலேயே சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரித்து கா ணப்பட்டது. அவர்கள் இங்குள்ள முக்கிய சுற்றுலா தலங்களான லேடிஸ் சீட், அண்ணா பூங்கா, ஏரிபூங்கா, ஐந்திணை பூங்கா, பொட்டானிக்கல் கார்டன், பக்கோடா பாயிண்ட் போன்ற இடங்களை கண்டு ரசித்து மகிழ்ந்தனர். மேலும் படகு இல்லத்தில் சுற்றுலாப் பயணிகள் படகு சவாரி செய்ய நீண்ட நேரம் காத்திருந்தனர். காலை நேரத்திலேயே படகு இல்லம் சுற்றுலாப் பயணிகள் கூட்டத்தால் களைகட்டியது. சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு காரணமாக மலைப் பாதை, ஏற்காடு அண்ணா பூங்கா, ஏரி பூங்கா சாலையில் கடுமையான போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டது.

# எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் ஸ்டெம்செல் தானம் பெற்று சிறுவனுக்கு சிகிச்சை

சென்னை, அக். 1

அரிய வகை மரபணு கோளாறு நோயால் பாதிக்கப்பட்டு படுத்தபடுக்கையான சிறுவனுக்கு, சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள்நல மருத்துவமனை மருத்துவர் அருணா ராஜேந்திரன், ஸ்டெம் செல் தானத்தைப் பெற்று அவரது உயிரை காப்பாற்றியுள்ளார்.

திருச்சி மாவட்டம் பாப்பாபட்டியைச்சேர்ந்த விவசாயி சங்கர்ஜானகி தம்பதியின் மூத்த மகன் சிறுவன் செல்வா (வயது 11) 7ம் வகுப்பு படித்து வருகிறார். பான்கோனி அனீமியா என்ற அரிய வகை மரபணு கோளாறு நோயால் பாதிக்கப்பட்ட இச்சிறுவன், அதனால் ஏற்பட்ட எலும்பு மஜ்ஜை செயலிழப்பால் படுத்த படுக்கையானார். இந்நிலையில் சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் மருத்துவமனையின் ஹீமாட்டாலஜி துறையின் இணை பேராசிரியரும், எலும்பு மஜ்ஜை மாற்று பிரிவின் பொறுப்பாளருமான மருத்துவர் அருணா ராஜேந்திரன், சிறுவனின் உயிரைக் காப்பாற்ற ஸ்டெம்செல் மாற்று அறுவை சிகிச்சை ஒன்றே தீர்வு என்பதை பரிசோதனைகள் மூலம் கண்டறிந்தார். பெற்றோரின் ஸ்டெம் செல் பொருந்தாததால், ஸ்டெம்செல் தானம் அளிக்க விரும்புபவர்களின் விவரங்களைப் பதிவு செய்து சேவை ஆற்றி வரும் டிகேஎம்எஸ் பிஎம்எஸ்டி என்கிற அறக்கட்டளையின் உதவியை நாடினார். அப்போது, அந்த அறக்கட்டளையில் பதிவு செய்திருந்த பெங்களூருவைச் சேர்ந்த கிளினிக்கல் பார்மசிஸ்ட் மருத்துவர் ஸ்மிதா ஜோஷி என்பவரின் ஸ்டெம்செல் சிறுவன் செல்வாவுக்கு பொருத்தமாக இருப்பது தெரியவந்தது. இதையடுத்து, ஸ்மிதா ஜோஷி, ஸ்டெம்செல்லை தானம் அளித்தார். ஸ்டெம் செல் மாற்றும் அறுவை சிகிச்சைக்கு பின்னர், சிறுவன் செல்வா பூரணமாக குணமடைந்துள்ளார்.

# தமிழக - கேரள எல்லையில் நிபா வைரஸ் கண்காணிப்பு முகாம் அக்.15 வரை நீட்டிப்பு



கூடலூர், அக். 1

கேரள மாநிலம் மலப்புரம் மாவட்டத்தில் நிபா வைரஸ் தீவிரமாக பரவி வருகிறது.

இந்த வைரஸ் தமிழகத்தில் பரவாமல் தடுக்கும் வகையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக தமிழக – கேரள எல்லைகளில் கண்காணிப்பு முகாம் நடத்தப்பட்டு வருகிறது. செப். 18 முதல் 30ம் தேதி வரை கண்காணிப்பு முகாம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், வரும் அக். 15ம் தேதி வரை முகாமை நடத்த வேண்டும் என தேனி மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில் குமுளி எல்லையில் அமைந்துள்ள லோயர் கேம்ப் காவல் சோதனைச் சாவடி அருகே பகலிலும் இரவிலும் பரிசோதனை முகாமை பொது சுகாதாரத் துறை மற்றும் கூடலூர் நகராட்சி இணைந்து நடத்தி வருகிறது.

# கணவனை உதறி தள்ளிவிட்டு 38 வயது ஊராட்சி தலைவி 22 வயது காதலனுடன் ஓட்டம்: செல்போன் சிக்னலை தேடி சென்ற போலீஸ், இறுதியில் செம டிவிஸ்ட்

ஆம்பூர், அக். 1

நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஒரு ஊராட்சியின் தலைவிக்கு 38 வயதாகிறது. திருமணமாகி கணவருடன் வசித்த அவருக்கும், அதே பகுதியை சேர்ந்த 22 வயது வாலிபருக்கும் இடையே கள்ளத் தொடர்பு ஏற்பட்டுள்ளது. இந்நிலையில், கடந்த 2 மாதங்களுக்கு முன்பு திடீரென அந்த ஊராட்சி தலைவி, கணவனை உதறி தள்ளிவிட்டு வாலிப காதலனுடன் தலைமறைவானார். இதுகுறித்து ஊராட்சி மன்ற தலைவியின் குடும்பத்தினர் நாமக்கல் போலீசில் புகார் அளித்தனர்.

அதன்பேரில், போலீசார் வழக்குப்பதிந்து மாயமான இருவரையும் தேடி வருகின்றனர். மேலும், ஊராட்சி தலைவியின் செல்போன் சிக்னலை வைத்து தீவிரமாக கண்காணித்து வந்தனர். அந்த சிக்னல் திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் அருகே ஒரு இடத்தை காண்பித்துள்ளது. அங்கு போலீசார் நேற்று முன்தினம் விரைந்தனர். அப்போது, ஆம்பூர் அடுத்த தேவலாபுரத்தில் ஒரு மதவழிபாட்டு தலம் அருகே சிக்னல் காட்டியது. அந்த இடத்தில் செல்போன் வைத்திருந்த வாலிபரை மடக்கி ஊராட்சி தலைவியை எங்கே என்று கேட்டதும் குழம்பி போன அவர் திருதிருவென விழித்தார்.

விசாரணையில் அந்த நபர், ஆம்பூர் அடுத்த தேவலாபுரம் எல்.மாங்குப்பத்தில் வசித்து வருவதாகவும், சில நாட்களுக்கு முன்பு புது செல்போன் எண்ணை ஒரு தனியார் நிறுவனத்திடம் இருந்து வாங்கியதாகவும் தெரிவித்தார். அந்த எண் கடந்த சில நாட்களுக்கு முன்பு 'இன்வேலிட் நம்பராக' கருதி எல்.மாங்குப்பம் வாலிபருக்கு கம்பெனி வழங்கியது தெரியவந்தது. அதற்கான ஆதாரங்களை அந்த வாலிபர் காட்டியபிறகு அவரை விடுவித்து போலீசார் ஏமாற்றத்துடன் திரும்பினர். மாயமான ஊராட்சி தலைவியையும் வாலிபரையும் தொடர்ந்து தேடி வருகின்றனர்.

# பி.எட். தரவரிசை பட்டியல்: வெளியீடு

சென்னை, அக். 1

நடப்பாண்டு பி.எட். படிப்புகளுக்கான விண்ணப்பபதிவு முடிவடைந்த நிலையில், விண்ணப்பித்தவர்களின் தரவரிசை பட்டியல் இன்று வெளியாகிறது. நடப்பாண்டில் பி.எட். படிப்பில், தமிழகத்தில் 7 அரசு கல்லூரிகளில் உள்ள 900 இடங்கள், 14 அரசு உதவி பெறும் கல்லூரிகளில் உள்ள 1,140 இடங்கள் என மொத்தம் 2,040 இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட உள்ளன. இதற்கான ஆன்லைன் விண்ணப்பப் பதிவு செப்டம்பர் 16ம் தேதி தொடங்கி 26ம் தேதி நிறைவடைந்தது. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை, ஆன்லைன் மூலமாகவும், டிமாண்ட் டிராப்ட் (டிடி) மூலமாகவும் செலுத்தினர். நடப்பாண்டு பி.எட். படிப்பிற்கு மொத்தம் 3,486 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 2,187 பேர் மட்டுமே விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியுள்ளனர். இந்நிலையில் பி.எட் படிப்பிற்கு விண்ணப்பித்தவர்களின் தரவரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட உள்ளது. எந்தெந்த கல்லூரிகளில் என்னென்ன பாடப்பிரிவுகள், சேர்க்கை எண்ணிக்கை போன்ற விவரங்கள் www.tngasa.in இணையதள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# தமிழகத்தில் அபாயகரமான விபத்துகள் கடந்த ஆண்டை விட தற்போது 5% குறைந்துள்ளது: டிஜிபி அலுவலகம் அறிக்கை



சென்னை, அக். 1

தமிழகத்தில் அபாயகரமான விபத்துகள் கடந்த ஆண்டை விட 5% குறைந்ததன் மூலம் 570 பேர் காப்பற்றப்பட்டுள்ளதாக டிஜிபி அலுவலகம் அறிக்கை வெளியிட்டுள்ளது. நடப்பு ஆண்டு ஜூலை மாதம் வரை 10,066 அபாயகரமான விபத்து வழக்குகள் பதிவானதாகவும் அதில் 10,536 பேர் உயிரிழந்ததாகவும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. 2023ஆம் ஆண்டில் ஜூலை வரை 10,589 மரண விபத்து வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது. 11,106 பேர் உயிரிழந்துள்ளனர். நடப்பாண்டில் தலைக்கவசம் அணியாமல் இருசக்கர வாகனத்தில் பயணித்ததாக மட்டும் 35லட்சம் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளது.

# மூலப்பொருட்கள் விலை உயர்வால் அட்டைபெட்டி விலை 15% அதிகரித்தது



திருப்பூர், அக். 1

தென்னிந்திய அட்டை பெட்டி உற்பத்தியாளர்கள் சங்க கோவை மண்டல பொதுக் குழு கூட்டம் நேற்று திருப்பூர், திருமுருகன் பூண்டியிலுள்ள தனியார் ஓட்டலில் நடைபெற்றது. இதில், ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டனர். இந்த கூட்டத்தில் சிவக்குமார் மீண்டும் தலைவராக தேர்வு செய்யப்பட்டார்.

இதில், அட்டைப் பெட்டி தயாரிக்கும் மூலப்பொருளான கிராப்டு காகிதம் கடந்த ஒரு மாதத்தில் ரூ.3 ஆயிரம் விலை ஏற்றப்பட்டுள்ளது. இது அட்டைப் பெட்டி உற்பத்தி தொழிலுக்கு பேராபத்தை தந்துள்ளது. அதுபோல், மின்சார கட்டணமும் உயர்ந்துள்ளது. எனவே, அட்டைப்பெட்டிக்கு இன்று (நேற்று) முதல் 15 சதவிகிதம் விலை உயர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றினர். இந்த விலை உயர்வுக்கு வாடிக்கையாளர்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# ஏடிஎம் கொள்ளையனிடம் நீதிபதி நேரில் விசாரணை

பள்ளிபாளையம், அக்.1

கேரள மாநிலம் திருச்சூரில் 3 ஏடிஎம் இயந்திரங்களை உடைத்து ரூ.67 லட்சத்துடன் கன்டெய்னர் லாரியில் தப்பிய அரியானா கொள்ளையர்களை நாமக்கல் மாவட்டம் பள்ளிபாளையம் அடுத்துள்ள வெப்படை சன்னியாசிபட்டியில் மடக்கி போலீசார் பிடித்தனர். அப்போது போலீசாரை தாக்கிவிட்டு தப்பியோட முயன்ற அரியானா மாவட்டம் பல்வாலை சேர்ந்த கொள்ளையர்கள் அஜர்அலி(30), ஜூமாந்தின் ஆகியோரை போலீசார் பாதுகாப்புக்காக துப்பாக்கியால் சுட்டனர்.

இதில் ஜூமாந்தின் இறந்தான். அஜர் அலிக்கு இரண்டு கால்களிலும் குண்டு பாய்ந்தது. இதையடுத்து கோவை அரசு மருத்துவமனையில் அஜார் அலிக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. அவனிடம் குமாரபாளையம் குற்றவியல் நீதித்துறை நடுவர் மாலதி நேற்று நேரில் விசாரணை மேற்கொண்டார். அஜர்அலி தெரிவித்த விவரங்களை நீதிபதி வீடியோ பதிவு செய்தார். இதனிடையே கொள்ளையர் கைது, என்கவுன்டர் குறித்து நேரில் விசாரிக்க தமிழக டிஜிபி சங்கர் ஜிவால் நாளை நாமக்கல் வருவதாக காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# தொடங்க உள்ள வடகிழக்கு பருவமழை பள்ளிகளில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்: பள்ளிக் கல்வித்துறை அறிவுறுத்தல்




சென்னை, அக். 1

வடகிழக்கு பருவமழை அடுத்த மாதம் (அக்டோபர்) 3வது வாரம் தொடங்க உள்ள நிலையில், பள்ளிகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் என்ன? மாணவர்கள் மழை காலங்களில் முன்னெச்சரிக்கையாக எப்படி இருக்க வேண்டும் என்பது உள்ளிட்ட வழிமுறைகள், அறிவுறுத்தல்களை பள்ளிக்கல்வித் துறை வெளியிட்டுள்ளது.

அதன் விவரம் வருமாறு:

★ பள்ளிகளில் மின் இணைப்புகளை கண்காணிப்பது, வடிகால்களை சுத்தம் செய்வது, திறந்த வெளி கால்வாய்களை தூர் வாரி மூடுவது, குழிகளை நிரப்புவது, மாணவர்களின் பாதுகாப்புக்கு பாதிப்பு ஏற்படுத்தும் மரங்கள் மரக்கிளைகளை வெட்டி அகற்ற வேண்டும்.

★ பள்ளி மேற்கூரைகளில் தண்ணீர் தேங்குவதை கண்காணித்து உடனடியாக அகற்ற நடவடிக்கை எடுக்கவேண்டும். பலவீனமான, பழுதடைந்த கட்டிடங்களை பயன்படுத்துவதை முற்றிலுமாக தவிர்க்க வேண்டும்.

★ இடிக்கப்பட வேண்டிய கட்டிடங்களை இடிப்பதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டும். சிறிய கட்டிடங்கள் இடிக்கப்பட வேண்டிய நிலையில் பள்ளி மேலாண்மைக் குழுவின் மூலம் இடிக்க தேவையான நடவடிக்கை எடுக்கலாம்.

★ பள்ளி வளாகங்களில் தண்ணீர் தேங்காமல் இருப்பதை உறுதிசெய்ய வேண்டும். ஏரி, ஆறு, குளங்களில் மாணவர்கள் சென்று குளிப்பதை தவிர்க்கவும், காட்டாற்று வெள்ளம் ஏற்படும் அபாயமுள்ள நீர்நிலைகளுக்கு அருகே வேடிக்கை பார்க்க அனுமதிக்கக்கூடாது என்பதையும் பெற்றோருக்கு அறிவுரை வழங்க வேண்டும்.

★ மாணவர்கள் சைக்கிள்களில் பள்ளிக்கு வரும் போது பாதுகாப்பாக வர அறிவுரைகூற வேண்டும். தொடர்மழை காரணமாக பள்ளியின் சுற்றுச்சுவர் மிகுந்த ஈரப்பதத்துடன் காணப்படலாம். எனவே சுற்றுச்சுவர் உறுதித்தன்மையை கண்காணிக்க வேண்டும். பழுதடைந்துள்ள சுற்றுச்சுவர் பகுதிகளை சுற்றி வேலி அல்லது தடுப்புகளை ஏற்படுத்திட வேண்டும்.

★ மின் இணைப்புகள் சரியாக உள்ளனவா? மின்கசிவு, மின்சுற்று கோளாறுகள் ஏதேனும் உள்ளனவா? என்பதை ஆய்வுசெய்து பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்.

★ பள்ளி வளாகத்தில் உள்ள நீர்த்தேக்க பள்ளங்கள், திறந்தவெளி கிணறுகள், கழிவுநீர் தொட்டி, தரைமட்ட நீர்த்தேக்க தொட்டிகள் இருக்கும் பட்சத்தில் அவை மூடியநிலையில் இருக்கிறதா என உறுதி செய்ய வேண்டும்.

★ பருவகால மாற்றங்களால் மாணவர்களுக்கு ஏற்படக்கூடிய நோய்களில் (டெங்கு, சிக்குன்குனியா உள்ளிட்ட) இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான தேவையான அறிவுரைகள் வழங்குவதுடன் நடவடிக்கைகளும் எடுக்க வேண்டும்.

# காலாண்டு விடுமுறை எதிரொலி பழனிக்கு படையெடுத்த பக்தர்கள்

பழனி, அக். 1

தமிழ்கடவுள் முருகனின் 3ம் படை வீடான பழனிக்கு தமிழகம் மட்டுமின்றி வெளி மாநிலங்கள், வெளி நாடுகளில் இருந்து பக்தர்கள் வருகின்றனர். தைப்பூசம், வைகாசி விசாகம், சூரசம்ஹாரம் உள்பட முக்கிய திருவிழாவின் போது ஏராளமான பக்தர்கள் பழனியில் குவிகின்றனர். மேலும் விடுமுறை நாட்களில் அதிக அளவில் பக்தர்கள் வருவதால் வருடம் முழுவதும் திருவிழாக்கோலம் பூண்டு காணப்படுகிறது.

நேற்று முதல் 10 நாட்களுக்கு காலாண்டு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து ஏராளமானோர் குடும்பத்துடன் பழனிக்கு படையெடுத்தனர்.

இதனால் பஸ் நிலையம், அடிவாரம், கிரிவீதி உள்ளிட்ட பகுதிகளில் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது. மேலும் படிப்பாதை, யானைப்பாதை, வின்ச்நிலையம், ரோப்கார் நிலையம் உள்ளிட்ட இடங்களிலும் கூட்டம் அதிகரித்து காணப்பட்டது. மலைக்கோவிலில் ஏராளமானோர் திரண்டனர். பொது தரிசனம், சிறப்பு தரிசனங்களிலும் நீண்ட வரிசை காணப்பட்டது. நீண்ட நேரத்திற்கு மேலாக காத்திருந்து சாமி தரிசனம் செய்தனர்.

அதிக அளவில் பக்தர்கள் வாகனங்கள் வந்திருந்ததால் பழனி நகர் பகுதியில் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

# அகழாய்வில் தங்க நாணயம் கண்டெடுப்பு



ஏழாயிரம்பண்ணை, அக். 1

விருதுநகர் மாவட்டம், வெம்பக்கோட்டை அருகே விஜயகரிசல்குளத்தில் மூன்றாம் கட்ட அகழாய்வு பணி நடைபெற்று வருகின்றது. இந்நிலையில் 10வது குழியில் நடந்த அகழாய்வில் தங்க நாணயம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து தொல்லியல் துறை அதிகாரி பாஸ்கரன் கூறுகையில், ''இந்த தங்க நாணயம் 17ம் நூற்றாண்டில் புழக்கத்தில் இருந்த தென்னிந்திய தங்கக்காசு. ஒரு பக்கத்தில் ஆறு இதழ் கொண்ட பூ போன்ற வடிவமும், மற்றொரு பக்கத்தில் புள்ளிகள் மற்றும் கோடுகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது'' என்றார்.

# கொடநாடு கொலை, கொள்ளை வழக்கு போயஸ் கார்டன் பூசாரி வங்கி மேலாளருக்கு சம்மன்: சிபிசிஐடி ஆபீசில் அக்.3ல் ஆஜராக உத்தரவு

ஊட்டி, அக. 1

கொடநாடு கொலை, கொள்ளை வழக்கில் புதுச்சேரி தனியார் வங்கி மேலாளர் மற்றும் போயஸ் கார்டனில் பல ஆண்டுகளாக பூசாரியாக இருந்தவருக்கு அக்.3ம் தேதி கோவை சிபிசிஐடி அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக சம்மன் வழங்கப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம், கோத்தகிரி அருகே கொடநாடு பகுதியில் ஜெயலலிதா மற்றும் சசிகலாவிற்கு சொந்தமான எஸ்டேட் மற்றும் பங்களாவில் நடந்த காவலாளி கொலை மற்றும் கொள்ளை தொடர்பான வழக்கு ஊட்டியில் உள்ள மாவட்ட நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.

இந்த வழக்கை தற்போது சிபிசிஐடி போலீசார் விசாரித்து வருகின்றனர். ஜெயலலிதாவின் கார் டிரைவர் கனகராஜின் அண்ணன் தனபால், கனராஜின் மனைவி, மைத்துனர், கொடநாடு எஸ்டேட் மேலாளர் நடராஜன், சசிகலா, முன்னாள் எம்எல்ஏ ஆறுகுட்டி உட்பட இதுவரை 316 பேரிடம் விசாரணை நடந்துள்ளது. இந்நிலையில், புதுச்சேரி தனியார் வங்கி மேலாளர் ஒருவரை கோவையில் உள்ள சிபிசிஐடி அலுவலகத்தில் அக்.3ம் தேதி விசாரணைக்கு ஆஜராகுமாறு சம்மன் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2017ல் சசிகலா கிழக்கு கடற்கரை சாலையில் ரிசார்ட்டுடன் கூடிய நிலத்தை வாங்க ஒப்பந்தம் செய்ததாகவும், அதற்காக புதுச்சேரி தனியார் வங்கியில் கடன் கேட்டது தொடர்பாகவும், அப்போது ரூ.50 கோடி வரை பழைய நோட்டுகள் மாற்றப்பட்டது குறித்தும் விசாரிக்க சம்மன் வழங்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதே போல், சென்னை போயஸ் கார்டனில் சிறு வயது முதலே பூசாரியாக பணியாற்றி வந்த கோத்தகிரியை சேர்ந்த விக்னேஷ் என்பவரையும் அக்.3ம் தேதி விசாரணைக்கு ஆஜராக சம்மன் வழங்கப்பட்டுள்ளது.

# ஒன்றிய அரசின் இறக்குமதி வரியால் 2 வாரத்தில் பாமாயில் விலை ரூ.525 உயர்ந்தது



விருதுநகர், அக். 1

ஒன்றிய அரசின் இறக்குமதி வரி உயர்வால் பாமாயில் விலை 2 வாரத்தில் ரூ.525 அதிகரித்து விற்கப்படுகிறது. இந்தியாவின் உணவு எண்ணெய் தேவையை பூர்த்தி செய்ய மாதம் தோறும் 15 லட்சம் டன் வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது. இந்தோனேசியா, மலேசியாவில் இருந்து 8 லட்சம் டன்கள் வரை பாமாயில் இறக்குமதியாகிறது. ஒன்றிய அரசின் இறக்குமதி வரி உயர்வால் கடந்த 2 வாரங்களுக்கு முன் ரூ.1,485க்கு விற்ற பாமாயில் டின், கடந்த வாரம் ரூ.375 உயர்ந்து ரூ.1,850க்கு விற்கப்பட்டது.

இந்த வாரம் மேலும் ரூ.150 உயர்ந்து ரூ.2,000 என விற்பனையானது. இதுகுறித்து விருதுநகர் எண்ணெய் மற்றும் புண்ணாக்கு விற்பனையாளர் சங்க தலைவர் சாவி.நாகராஜன் கூறுகையில், ''ஒன்றிய அரசு இறக்குமதி வரியை உயர்த்தியதால் கடந்த வாரம் பாமாயில் டின்னுக்கு ரூ.375 உயர்ந்தது. மலேசிய அரசு ஏற்றுமதி வரியை குறைக்கும் என எதிர்பார்த்த நிலையில், அங்கு பாமாயில் உற்பத்தி குறைவு ஏற்பட்டு ஏற்றுமதி வரி உயர்த்தப்பட்டுள்ளது. இதனால் பாமாயில் டின்னுக்கு மேலும் ரூ.150 அதிகரித்துள்ளது.

பாமாயில் விலை உயர்வை தொடர்ந்து கடலை எண்ணெய் 15 கிலோ டின்னுக்கு ரூ.50 உயர்ந்து ரூ.2,800 ஆகவும், நல்லெண்ணைய் டின் ரூ.6,105 ஆகவும் விற்பனையாகிறது. ஆயுத பூஜை வருவதை முன்னிட்டு தேவை அதிகரிப்பால் கொண்டக்கடலை ரூ.200அதிகரித்துரூ.8,200 ஆக விற்கப்படுகிறது. அதேசமயம் துவரம்பருப்பு ரூ.300 சரிந்து ரூ.10,500 ஆகவும், உருட்டு உளுந்தம் பருப்பு நாடு ரூ.150 குறைந்து ரூ.12,200 ஆகவும் விற்பனையாகிறது. பர்மா உளுந்தம்பருப்பு ரூ.200 குறைந்து ரூ.10,000, பாசிப்பருப்பு ரூ.100 குறைந்து ரூ.10,700 என விற்பனையாகிறது'' என தெரிவித்தார்.

தினகனி



# கால்வாய்களில் குப்பை கொட்டியவர்களுக்கு 2 லட்சம் அபராதம்

சென்னை, அக். 1

சென்னை மாநகராட்சி, மண்டலம்4ல் கொடுங்கையூர், கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், வியாசர்பாடி கால்வாய், ஜவகர் கால்வாய் மற்றும் இணைப்பு கால்வாய் ஆகிய கால்வாய்களில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கையாக தூர்வாரும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் இந்த கால்வாய்களில் குப்பை கொட்டுவோர் மீது நடவடிக்கை எடுக்கும்படி, மாநகராட்சி ஆணையர் அவர்களால் உத்தரவிடப்பட்டதை தொடர்ந்து வடக்கு வட்டார துணை ஆணையர் தலைமையில் கண்காணிப்பு குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்குழு நான்காவது மண்டல அலுவலர்தலைமையில்நேற்று கால்வாய்களை ஒட்டியுள்ள பகுதிகளில் திடீர் சோதனை மேற்கொண்டது. சோதனையில் கால்வாய்களில் குப்பை கொட்டிய வீடுகள், கடைகள் மற்றும்வணிகநிறுவனங்கள் ஆகியவற்றிற்கு ரூ.2,05,000 அபராதம் விதிக்கப்பட்டது. கால்வாய்களில் குப்பைகளை கொட்டி நீர்நிலைகளின் ஓட்டத்திற்கு தடை ஏற்படுத்துவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என மாநகராட்சி அதிகாரிகள்எச்சரிக்கைவிடுத்தனர்.

# பி.எட். தரவரிசை பட்டியல்: வெளியீடு

சென்னை, அக். 1

நடப்பாண்டு பி.எட். படிப்புகளுக்கான விண்ணப்பபதிவுமுடிவடைந்த நிலையில், விண்ணப்பித்தவர்களின் தரவரிசை பட்டியல் இன்று வெளியாகிறது. நடப்பாண்டில் பி.எட். படிப்பில், தமிழகத்தில் 7 அரசு கல்லூரிகளில் உள்ள 900 இடங்கள், 14 அரசு உதவி பெறும் கல்லூரிகளில்உள்ள1,140இடங்கள் என மொத்தம் 2,040 இடங்கள் கலந்தாய்வு மூலம் நிரப்பப்பட வுள்ளன. இதற்கான ஆன்லைன்விண்ணப்பப்பதிவு செப்டம்பர் 16ம் தேதி தொடங்கி 26ம் தேதி நிறைவடைந்தது. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பக் கட்டணத்தை, ஆன்லைன் மூலமாகவும், டிமாண்ட் டிராப்ட் (டிடி) மூலமாகவும் செலுத்தினர். நடப்பாண்டு பி.எட். படிப்பிற்கு மொத்தம் 3,486 பேர் விண்ணப்பித்திருந்தனர். இவர்களில் 2,187 பேர் மட்டுமே விண்ணப்பக் கட்டணத்தை செலுத்தியுள்ளனர். இந்நிலையில் பி.எட் படிப்பிற்கு விண்ணப்பித்தவர்களின் தரவரிசை பட்டியல் இன்று வெளியிடப்பட உள்ளது. எந்தெந்த கல்லூரிகளில் என்னென்ன பாடப்பிரிவுகள், சேர்க்கை எண்ணிக்கை போன்ற விவரங்கள் www.tngasa.in இணையதள முகவரியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை கடற்படையினர் அட்டூழியம் ராமேஸ்வரம் மீனவர்கள் 17 பேர் இரு படகுடன் கைது: மீனவ குடும்பத்தினர் சாலை மறியல்



ராமேஸ்வரம், அக். 1

மீன்பிடிக்க கடலுக்குச் சென்ற ராமேஸ்வரம் மீனவர்கள்17பேரைஇலங்கை கடற்படையினர் கைது செய்தனர். ராமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் இருந்து நேற்று முன்தினம் 300 விசைப்படகுகளில் 1,500க்கும் மேற்பட்ட மீனவர்கள் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர். மாலையில் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது, 10 ரோந்து கப்பல்களில் அப்பகுதிக்கு வந்த இலங்கை கடற்படையினர் அவர்களை விரட்டியடித்தனர். சிறைபிடிக்கும் நோக்கில் தொடர்ந்துவிரட்டியதால், மீனவர்கள் வலைகளை வெட்டிவிட்டு அங்கிருந்து தப்பினர்.

ஆனால் தங்கச்சிமடத்தை சேர்ந்த செல்வம், உயிர்த்தராஜ் ஆகியோரின் இரு படகுகளையும் இலங்கை கடற்படையினர் சுற்றி வளைத்தனர். இரு படகுகளையும் கைப்பற்றி, அதிலிருந்த மீனவர்கள் செபஸ்டியன் (38), ராஜீவ் (35), விவேக் (35), இன்னாசி (36), சாமுவேல் (33), பிரிஜோன் (31), பாஸ்கரன் (30), இருதய நிஜோ (26), மரியசீலன் (27), துரை (39), அருள் தினகரன் (23), சுரேஷ் (45), ஜீவன் பிரைஜர் (22), மார்க்மிலன் (37), மில்டன் (48), ரொனால்ட் (48), சேசுராஜா (45) ஆகிய 17 பேரை கைது செய்து மன்னார் கடற்படை முகாமிற்கு அழைத்துச் சென்று மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இச்சம்பவம் ராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது. இதையடுத்து மீனவர்களின் குடும்பத்தினர், சக மீனவர்கள் ராமேஸ்வரம் – ராமநாதபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நேற்று மறியலில் ஈடுபட்டனர். சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களையும் படகுகளையும் உடனே விடுவிக்க வலியுறுத்தி கோஷம் எழுப்பினர். மீனவர்களின் குடும்பத்தினர் கதறி அழுதனர். சம்பவ இடத்திற்கு வந்த போலீசார் அவர்களை சாலையிலிருந்து அப்புறப்படுத்தினர். இதைத் தொடர்ந்து மீனவர்களின் குடும்பத்தினர் தங்கச்சிமடம் முருகன் கோயில் எதிரே சாலையோரம் காத்திருப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களை அதிகாரிகள் சமாதானம் செய்து அனுப்பினர்.

# கேரளாவில் கைது செய்யப்பட்ட ரவுடி எஸ்டேட் மணி வேலூர் சிறையில் அடைப்பு



வேலூர், அக். 1

திருநெல்வேலியை சேர்ந்தவர் ரவுடி எஸ்டேட் மணி(40). இவர் மீது கொலை மற்றும் கொலை முயற்சி வழக்குகள் நிலுவையில் உள்ளன. இந்நிலையில் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டு திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டை சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். பின்னர் அவர் வேலூர் சிறைக்கு மாற்றப்பட்டார். கடந்த 2019ம் ஆண்டு, சிறையில் சோதனை செய்ய வந்த காவலர்களிடம் ஒத்துழைப்பு வழங்காமல் எஸ்டேட் மணி தகராறில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது.

இது குறித்த புகாரின்பேரில் பாகாயம் போலீசார் வழக்கு பதிவு செய்தனர். இந்த வழக்கு வேலூர் ஜெஎம்1 கோர்ட்டில் நடந்து வந்தது. இந்நிலையில்சிறையில்இருந்து ஜாமீனில் வெளியே வந்த எஸ்டேட் மணி வழக்கில் ஆஜராகாமல் தலைமறைவாகிவிட்டார்.

இது குறித்த புகாரின்பேரில் பாகாயம் போலீசார் தேடி வந்தனர். இதற்கிடையே கடந்த 2202ம் ஆண்டு கோர்ட் வாரண்டு பிறப்பித்தது. இந்நிலையில் மதுரையை சேர்ந்த தனிப்படை போலீசார் கேரள மாநிலம் மூணாறில் பதுங்கி இருந்த எஸ்டேட் மணியை துப்பாக்கி முனையில் கைது செய்தனர். இதையடுத்து, பாகாயம் போலீசில் மணி மீது வழக்கு நிலுவையில் உள்ளதாலும், கோர்ட் வாரண்டு பிறப்பித்திருந்ததாலும் எஸ்டேட் மணியை தனிப்படை போலீசார், பாகாயம் போலீசில் ஒப்படைத்தனர். இதையடுத்து, போலீசார் நேற்று எஸ்டேட் மணியை மாஜிஸ்திரேட் முன் ஆஜர்படுத்தினர். வரும் 3ம்தேதி வரை நீதிமன்ற காவலில் வைக்க மாஜிஸ்திரேட் உத்தரவிட்டார். அதைத்தொடர்ந்து அவரை வேலூர் மத்திய சிறையில் அடைத்தனர்.

# திண்டிவனம் அருகே பைக் மீது கார் மோதி 3 பேர் பலி



திண்டிவனம், அக். 1

திண்டிவனம் அருகே சென்னைதிருச்சி நெடுஞ்சாலையில் நள்ளிரவில் பைக் மீது கார் மோதிய விபத்தில் ஓட்டல் உரிமையாளர், பெட்டிக்கடை வியாபாரி ஆகியோர் பலியானார்கள். மேலும் சாலையை கடந்தவரும் இதே கார் மோதி இறந்தார். விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அருகே பேரணி கிராமத்தை சேர்ந்தவர்கள் பூபாலன் (45), இவர் அதே கிராமத்தில் பங்க் கடை நடத்தி வந்தார். இதே பகுதியில் இட்லி கடை (ஓட்டல்) நடத்தி வந்தவர் ஐயப்பன் (35). நண்பர்களான இருவரும் புரட்டாசி சனிக்கிழமை தினமான நேற்று திருப்பதி கோயிலுக்கு பேருந்தில் சென்று தரிசனம் செய்தனர். பின்னர் இருவரும் பேருந்தில் ஊர் திரும்பினர். நள்ளிரவு 12 மணி அளவில் கூட்டேரிப்பட்டில் இறங்கி அங்கு நிறுத்தி வைத்திருந்த பைக்கை எடுத்துக்கொண்டுபேரணி நோக்கி புறப்பட்டனர்.

அவர்கள் மயிலம் அருகேவிளங்கம்பாடியில் சென்னைதிருச்சி தேசிய நெடுஞ்சாலையில்சென்று கொண்டிருந்தபோது சென்னையில் இருந்து திருச்சி நோக்கி கார் ஒன்று சென்று கொண்டிருந்தது. அப்போது எதிர்பாராதவிதமாகசாலையின்குறுக்கே நடந்து சென்ற ஒருவர் மீது கார் மோதியதில் அங்குள்ள டிவைடர் (தடுப்புக் கட்டை) மீது மோதி பின்னர் எதிர்புறம் சென்று கொண்டிருந்த பைக் மீது கார் மோதியது. இந்த விபத்தில் சாலையின் குறுக்கே நடந்து சென்றவர் மற்றும் பைக்கில் சென்ற ஐயப்பன் மற்றும் பூபாலன் ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே துடிதுடித்து இறந்தனர். சாலையை கடந்தபோது கார் மோதி இறந்தவர் யார் என்ற விபரம் தெரியவில்லை.

இதுபற்றி தகவல் அறிந்த மயிலம் காவல்துறையினர்சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று சடலங்களை பார்வையிட்டு விசாரணை நடத்தினர். மேலும் மூன்று சடலங்களையும் மீட்டு பிரேத பரிசோதனைக்காக முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதற்கிடையே விபத்து நடந்ததும் கார்டிரைவர்சேதமடைந்த காரை நிறுத்தி விட்டு தப்பியோடிவிட்டார். போலீசார் அவரை தேடி வருகின்றனர்.



சென்னை அசோக் நகரில் சாலையோரம் இருந்த மழைநீர் கால்வாயில் விழுந்த நபர் உயிரிழந்தார். உயிரிழந்த நபர் அம்பேத்கர் நகரைச் சேர்ந்த ஐயப்பன் என்பது தெரியவந்துள்ளது. மழைநீர் கால்வாயில் விழுந்து இறந்த ஐயப்பனின் உடலை மீட்டு மக்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். உரிய வழிமுறைகளை பின்பற்றாமல் தடுப்புகள் வைக்கப்பட்டுள்ளதாக பொதுமக்கள் குற்றச்சாட்டு வைத்துள்ளனர்.

# குடும்பத்துடன் மகிழ்ச்சியாக பிறந்தநாளை கொண்டாடிய ரன்பீர் கபூர்



இந்தி திரை உலகில் முன்னணி கதாநாயகனாக திகழ்ந்து வருபவர் ரன்பீர் கபூர். சில மாதங்களுக்கு முன்பு வெளியான அனிமல் படத்தில் நடித்திருந்தார். சர்வதேச அளவில் திரைக்கு வந்த இந்த படம் பெரிய வெற்றியை பெற்றதுடன் வசூலையும் வாரி குவித்தது.

அடுத்ததாக ராமாயணம் என்ற படத்தில் ராமர் கதாபாத்திரத்தில் நடித்து வருகிறார். சீதையாக சாய்பல்லவி நடித்துள்ளார். பெரும் பொருட்செலவில் படம் தயாராகி வருகிறது. இந்நிலையில் ரன்பீர் கபூர் தனது 42வது பிறந்தநாளை நேற்று கொணடாடினார்.

மனைவி ஆலியாபட், மகள் ரஹாவுடன் மகிழ்ச்சியாக தனது பிறந்தநாளை கொண்டாடிய புகைப்படங்களை தனது சமூக வலைதள பக்கத்தில் வெளியிட்டுள்ளார். அவருக்கு திரை உலகினர் பலர் வாழ்த்து தெரிவித்தனர்.

ஆலியாபாட் தற்பொழுது ஜிக்ரா என்ற படத்தில் நடித்துள்ளார். திரைப்படத்தின் டிரைலர் அண்மையில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. திரைப்படம் அக்டோபர் 11 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

# சசிகுமார் நடித்த Freedom படத்தின் கிளிம்ப்ஸ் வீடியோ




சசிகுமார் நடிப்பில் அண்மையில் நந்தன் திரைப்படம் வெளியானதி. இத்திரைப்படம் மக்களிடையே கலவையான விமர்சனத்தை பெற்றது. அடுத்ததாக சசிகுமார் ஃப்ரீடம் என்ற படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் நடிகை லிஜோமோல் ஜோஸ் கதாநாயகியாக நடித்துள்ளார். சசிகுமாரின் பிறந்தநாளை முன்னிட்டு படக்குழு ஸ்பெஷல் கிளிம்ப்ஸ் வீடியோவை படக்குழு வெலியிட்டுள்ளது. இப்படத்தை சத்யசிவா இயக்கியுள்ளார். இதற்குமுன் கழுகு, சவாலே சமாளி மற்றும் 1945 திரைப்படங்களை இயக்கியுள்ளார். தவறே செய்யாமல் இலங்கை அகதிகளாக சிறைச்சாலையில் சிக்கிக்கொண்ட இருவர் தப்பித்து செல்வதுப் போன்ற கதைக்களத்தில் இப்படம் அமைந்துள்ளது. படத்திற்கு ஜிப்ரான் இசையமைத்துள்ளார். படத்தின் ரிலீஸ் தேதி விரைவில் அறிவிக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.

# ஃபகத் பாசிலின் 'பொகெயின்வில்லா' படத்தின் ரிலீஸ் தேதி அறிவிப்பு




மலையாள ரசிகர்களால் ஃபாஃபா என்று அன்புடன் அழைக்கப்படுபவர் ஃபகத் ஃபாசில். மலையாள சினிமா மட்டுமன்றி, தென்னிந்திய திரையுலகில் முன்னணி நடிகராக வலம் வருகிறார்.

தமிழில் வேலைக்காரன், சூப்பர் டீலக்ஸ், விக்ரம் மற்றும் தெலுங்கில் புஷ்பா உள்ளிட்ட படங்களில் தனது தனித்துவமான நடிப்பினால் ரசிகர்களை கவர்ந்தார். அடுத்ததாக ரஜினிகாந்த் நடிக்கும் வேட்டையன் திரைப்படத்தில் நடித்துள்ளார்.

இதைத்தொடர்ந்து மலையாளத்தில் ஃபகத் ஃபாசில் பொகெயின்வில்லா திரைப்படத்தில் நடித்துள்ளார். இத்திரைப்படத்தை ஃபகத்தின் நெருங்கிய நண்பரான அமல் நீரட் இயக்குகிறார். மலையாளத்தில் மமூட்டி நடிப்பில் 2022 ஆம் ஆண்டு வெளியான பீஷ்மா பர்வம் திரைப்படத்தை அமல் நீரட் இயக்கினார்.

இப்படத்தில் ஃபஹத் ஃபாசிலுடன் , குஞ்சாக்கோ போபன், வீணா நந்த குமார், ஜோதிர்மயி, ஸ்ரீண்டா, முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்துள்ளனர். இப்படம் ஒரு அதிரடி ஆக்ஷன் நிறைந்த படமாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனந்த சந்திரன் ஒளிப்பதிவை மேற்கொள்ள, சுஷின் ஷியாம் இப்படத்திற்கு இசையமைத்துள்ளார். படத்தின் ரிலீஸ் தேதியை படக்குழு அறிவித்துள்ளது. திரைப்படம் வரும் அக்டோபர் 17 ஆம் தேதி வெளியாகவுள்ளது.

# பயிற்சியில் பும்ரா வீசிய 15 பந்தில் 4 முறை அவுட்டான விராட் கோலி



பென் டக்கெட் சதம்: ஆஸ்திரேலியா வெற்றிபெற 310 ரன்களை இலக்காக நிர்ணயித்தது இங்கிலாந்து

ஆஸ்திரேலியஅணிஇங்கிலாந்தில்சுற்றுப்பயணம் செய்து 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகிறது. நான்கு போட்டிகளின் முடிவில் இரு அணிகளும் தலா 2 வெற்றிகள் பெற்றுள்ளன.

இந்நிலையில், வெற்றியாளரை நிர்ணயிக்கும் கடைசி மற்றும் 5வது ஒருநாள் போட்டி பிரிஸ்டோலில் இன்று நடைபெறுகிறது. டாஸ் வென்ற ஆஸ்திரேலியா பவுலிங் தேர்வு செய்தது.

அதன்படி, இங்கிலாந்து அணி முதலில் களமிறங்கியது. தொடக்கம் முதலே அந்த அணி அதிரடியில் இறங்கியது. முதல் விக்கெட்டுக்கு 58 ரன்கள் சேர்த்த நிலையில் பிலிப் சால்ட் 27 பந்தில் 45 ரன் எடுத்து வெளியேறினார். அடுத்து இறங்கிய வில் ஜாக்ஸ் டக் அவுட்டானார்.

3வது விக்கெட்டுக்கு இணைந்த பென் டக்கெட், ஹாரி புரூக் ஜோடி அதிரடியில் மிரட்டியது. ஹாரி புரூக் அரை சதம் கடந்தார். இந்த ஜோடி 132 ரன்கள் சேர்த்த நிலையைல ஹாரி புரூக் 72 ரன்னில் ஆட்டமிழந்தார்.

பொறுப்புடன் ஆடிய பென் டக்கெட் சதமடித்து அசத்தினார். அவர் 107 ரன்னில் வெளியேறினார். அடுத்து வந்த வீரர்கள் விரைவில் வெளியேறினர். கடைசி கட்டத்தில் போராடிய அடில் ரஷித் 36 ரன்கள் எடுத்தார்.

இறுதியில், இங்கிலாந்து அணி 309 ரன்களுக்கு ஆல் அவுட்டானது. ஆஸ்திரேலியா சார்பில் டிராவிஸ் ஹெட் 4 விக்கெட்டும், ஆடம் ஜாம்பா, ஆரோன் ஹார்டி, மேக்ஸ்வெல் ஆகியோர் தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர். இதையடுத்து, 310 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆஸ்திரேலியா களமிறங்குகிறது.

# ஐ.பி.எல்.: அந்த விதிமுறையால் தோனி மட்டுமல்ல மற்ற சில வீரர்களும் பயனடைவார்கள் ஆகாஷ் சோப்ரா



10 அணிகள் பங்கேற்கும் 18வது ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2025) மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் நடக்கிறது. இந்த போட்டிக்கான வீரர்களின் மெகா ஏலம் நவம்பர் கடைசி வாரத்தில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த தொடருக்கான புதிய ஏல விதிமுறைகளை பி.சி.சி.ஐ. நேற்று வெளியிட்டது. அதில் அன்கேப்ட் வீரர் விதிமுறையை பி.சி.சி.ஐ. மீண்டும் கொண்டு வந்துள்ளது. இதைப் பயன்படுத்தி மகேந்திரசிங் தோனியை ரூ. 4 கோடிக்கு சென்னை அணி தக்க வைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ள அன்கேப்ட் விதிமுறையால் மோகித் சர்மா, பியூஷ் சாவ்லா, விஜய் சங்கர், சந்தீப் சர்மா, கரண் சர்மா போன்ற வீரர்களும் பயனடைவார்கள் என்று முன்னாள் வீரர் ஆகாஷ் சோப்ரா கூறியுள்ளார்.

இது குறித்து அவர் பேசியது பின்வருமாறு: "அன்கேப்ட் பிளேயர் விதிமுறை ஏன் உங்களுக்கு வேண்டும்? ஏனெனில் உங்களால் அதை பயன்படுத்தி ஒருவரை ரூ.4 கோடிக்கு தக்க வைக்க முடியும். எனவே அது உங்களுடைய மொத்த ஏலத் தொகையை பாதிக்காது. நீங்கள் 5 வீரர்களை தக்க வைத்தால் சுமார் ரூ.75 கோடி செலவிட வேண்டும். அதனால் உங்களுடைய ஏலத்தொகை குறையும். அன்கேப்ட் பிளேயர் விதிமுறை பற்றி பேசும் போது எம்.எஸ். தோனி இருப்பார். 2008 முதலே நடப்பில் இருந்த அந்த விதிமுறை அதிகம் பயன்படுத்தாததால் நீக்கப்பட்டு தற்போது மீண்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.

அதன் காரணமாக பியூஷ் சாவ்லா, மோகித் சர்மா, சந்தீப் சர்மா, விஜய் சங்கர், கரண் சர்மா, மயங்க் மார்கண்டே, சஷாங்க் சிங் போன்றவர்கள் பயனடைவார்கள். ஏனெனில் அவர்களுக்கு தனியாக பணம் செலுத்த அணி நிர்வாகங்கள் தயங்கலாம். திடீரென இப்படி ஒரு விதிமுறை வரும்போது அதைப் பயன்படுத்தவே அனைவரும் விரும்புவார்கள். கண்டிப்பாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியும் ரூ.4 கோடிக்கு தோனியை தக்க வைக்கும்" என்று கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.